தி.மு.க. மாணவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

19- ஆம் பக்கத் தொடர்ச்சி

காட்டுக்காரத் தெரு, திருவாரூர் 2) பி.தர்மராஜ் 5, நவகிரகத் தெரு, திருவாரூர் 3) எஸ்.ராம்குமார் 42/2 மேலவடம் போக்கித் தெரு, திருவாரூர் 4) டி.எஸ்.ஆகாஷ் (எ) மணிகண்டன் 7ஏ 15/1 காட்டுக்காரத் தெரு மேற்கு, திருவாரூர் 5) எஸ். சுவாதி சங்கர் 7ஏ 15/1 மூர்த்தி விநாயகர் கோவில் தெரு திருவாரூர்

கூத்தாநல்லூர் நகரம்

அமைப்பாளர் - கே.எழில் அன்பன் 37, கம்பர் தெரு, லெட்சுமாங்குடி திருவாரூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி.ராம்பிரசாத் 1/12 ஜெகநாத பிள்ளை தெரு, லெட்சுமாங்குடி 2) கே.ஹெச்.முஹம்மது பரீத் காதர் 184, அப்துல் ரஹ்மான் ரோடு, கூத்தாநல்லூர் 3) கே.முகம்மது பரதான் 5ஏ/1, தேர்வடக்குத் தெரு, மரக்கடை, லெட்சுமாங்குடி

4) ஆர்.அரவிந்த் ராஜ் 24 தெற்கு தெரு மெயின் ரோடு, கோரையாறு, லெட்சுமாங்குடி 5) வி.சௌந்தர லெட்சுமி 11/24 தமிழர் தெரு மெயின் ரோடு, பண்டுதக்குடி, கூத்தாநல்லூர்

குடவாசல் பேரூர்

அமைப்பாளர் - ஆர்.ஆன்ந்த்ராஜ் 3/1ஏ, ஆற்றங்கரைத் தெரு, குடவாசல், திருவாரூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே.சுரேஷ் 12 புதுத் தெரு, அத்திக்கடை, குடவாசல் 2) ஜி.சக்திவேல் 7/91, ஆற்றங்கரைத் தெரு, குடவாசல் 3) டி.செந்தில்குமார் 16 நடு அக்ரஹாரம், குடவாசல் 4) டி.சந்தியா 6, புதுக்கடைத் தெரு, குடவாசல்

வலங்கைமான் பேரூர்

அமைப்பாளர் - ந.சுரேந்திரன் கீழத் தெரு, வலங்கைமான், திருவாரூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) து.சந்திரசேரன் மரப்பாளையத் தெரு, வலங்கைமான் 2) ஜெ.கௌதமராஜன் உப்புகாரத் தெரு, வலங்கைமான்

3) ர.அரவிந்த் , கீழத் தெரு, வலங்கைமான் 4) ஆர்.விஷ்ணுபிரியா 23/13 அய்யனார் கோவில் தெரு, வலங்கைமான்

நன்னிலம் பேரூர்

அமைப்பாளர் - ஆர்.ஹரிபிரசாத் பெருமாள் கோவில் தெரு, நன்னிலம்

துணை அமைப்பாளர்கள் - 1) கே.தர்மபிரகாஷ் 74, பெருமாள் கோவில் தெரு, நன்னிலம் 2) சி.அரவிந்தராஜ் மாதாக் கோவில் தெரு, மாப்பிள்ளைக்குப்பம், நன்னிலம் 3) எம். ஸ்டாலின் 1, ரயிலடி வடக்குத் தெரு, சன்னாநல்லூர் அஞ்சல், நன்னிலம் 4) சி.நந்தினி மாதாக் கோவில் தெரு, மாப்பிள்ளைக்குப்பம், நன்னிலம்

பேரளம் பேரூர்

அமைப்பாளர் - எஸ்.சதீஷ்குமார் வடக்குத் தெரு, பேரளம்

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.நிவாஸ் தேரடித் தெரு, பேரளம் 2) கே.கார்த்தி மேலவீதி, இஞ்சிக்குடி, பேரளம் 3) ஆர்.கதிரவன், தெற்குத் தெரு, இஞ்சிக்குடி, பேரளம் 4) எஸ். ராஜேஸ்வரி திருவாரூர் மெயின் ரோடு, பேரளம்

முத்துப்பேட்டை பேரூர்

அமைப்பாளர் - ஜே.தமிழரசன் 89, காளியம்மன் கோவில் தெரு, முத்துபேட்டை

துணை அமைப்பாளர்கள் - 1) கே.முகம்மது இப்ராஹீம் 5, கும்மிவாடி சந்து நடுத் தெரு, முத்துபேட்டை 2) கே.குருமூர்த்தி 31ஏ, பி.டபில்யூ பங்களா ரோடு, முத்துபேட்டை 3) எம்.விவேக் பாண்டியன் 236 மருதங்காவெளி, முத்துபேட்டை 4) கே.கார்த்திகா ஆதிதிராவிடர் தெரு பேட்டை, முத்துப்பேட்டை

நீடாமங்கலம் பேரூர்

அமைப்பாளர் - கே.முகமது ஜப்பார் 8, பள்ளிவாசல் தெரு, நீடாமங்கலம்

துணை அமைப்பாளர்கள் - 1) வி.தேவசகாயம் 18, கொத்தமங்கலம், மாதாகோவில் தெரு, நீடாமங்கலம் 2) வி.விக்னேஷ் 17/1, கீழத் தெரு, பழைய நீடாமங்கலம் நீடாமங்கலம் 3) ஆர்.கிரி 35, மோதிலால் நேரு தெரு, நீடாமங்கலம் 4) எஸ்.சுபஸ்ரீ 19ஏ, காமராஜர் காலனி நீடாமங்கலம்

கொரடாச்சேரி பேரூர்

அமைப்பாளர் – கே.சரவணக்குமார் 6, சிவன் கோவில் தெரு, கொரடாச்சேரி, நீடாமங்கலம்

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.கிருபாகரன் 43, விஸ்வநாதபுரம், கொரடாச்சேரி, நீடாமங்கலம் 2) பி.ஸ்ரீநிவாஸ் 9, மங்களாபுரம் தெரு, கொரடாச்சேரி, நீடாமங்கலம் 3) வி.ஹரிஹரன் 242, சிமிழி ரோடு, வடக்கு மாங்குடி, கொரடாச்சேரி, நீடாமங்கலம் 4) எஸ்.அகிலா 4, தெற்கு மாங்குடி, கொரடாச்சேரி, நீடாமங்கலம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-06-2025.

இரா. ராஜீவ்காந்தி,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, சைதை சாதிக், பேரரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அருகில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் முன்னாள் மாவட்டத் தலைவர் ஒன்றிய செயலாளர் பேரூராட்சி தலைவர் செங்குன்றம் என் எம் துரைசாமி அவர்களின் 90 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் விநாயகபுரம் சமர்ப்பணம் இல்ல மாணவர்களுக்கு பிரியாணி வழங்கினார். உடன் மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டி.கோபால், டி.இ.இளங்கோ ரேணுகா, தேவி, பாலு, குமார் வட்ட செயலாளர் டி. சுந்தரம், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.பார்த்தசாரதி, குணசேகர், ஸ்ரீ உமா மகேஸ்வரி, வி.பாஸ்கர், ஏ.வி. முருகன், பி. தேவராஜ், பவானி, ஸ்ரீதரன் மற்றும் என்.எம்.துரைசாமி அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 133வது நாள்!

எழும்பூர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஜூலை.3- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 133 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (02.7.2025) எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 61 தமிழ் சாலை, (குழந்தைகள் நல மருத்துவமனை அருகில்). 2) வட்டம் 61 அ அய்யா சாமி தெரு குடிசை பகுதி எல்.ஜி. ரோடு, சென்னை. ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு

அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர். பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்..சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

"ஓரணியில் தமிழ்நாடு" பரப்புரை இயக்கம் மூலம்

தமிழ்நாடு மக்களை ஒன்றுதிரட்டுவது தான் இலக்கு!

அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர் ஜூலை.3. ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை இயக்கம் மூலம் தமிழக மக்களை ஒன்று திரட்டுவது தான் இலக்கு என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன்...

ஓரணியில் தமிழ்நாடு என்ற பரப்புரை முழக்கத்தை, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்து, வரும் 45 நாட்களுக்கு ஒவ்வொரு கிராமம், நகரம், பூத் என தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஓரணியில் தமிழ்நாடு என்கிற முழக்கத்தை ஒலிக்கச்செய்ய இருக்கிறது தி.மு.க.

இந்த பரப்புரை இயக்கம் என்பது உறுப்பினர் சேர்க்கும் ஒரு நிகழ்வாக மட்டுமே இருக்கக்கூடாது. தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க தமிழ்நாட்டில் உள்ள ஒவ்

வொரு குடும்பத்தையும் ஒன்று திரட்டுவது தான் இதன் முக்கிய நோக்கம் என முதல்வர் ஏற்கெனவே கூறியுள்ளார்.

சாதி, மத, அரசியல் பாகுபாடுகள் இன்று தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரையும் அணுகி, தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அனைத்து அநீதிகளுக்கும் எதிராக ஓரணியில் திரள வேண்டிய தன் அவசியத்தை எடுத்துரைக்க உள்ளோம்.

பா.ஜ.க. தமிழ்நாட்டை எப்போதும் வன்மத்தோடு பார்க்கிறது. அ.தி.மு.க. கூட்டணி என்ற பெயரில் அதற்கான அடித்தளம் அமைத்து கொடுக்கிறது.

ஏற்கெனவே பாஜக ஆட்சி அமைத்துள்ள மாநிலங்கள் பாசிசத்தின் பரிசோதனைக் கூடங்களாக மாறி உள்ளது. தமிழ்நாட்டையும் பாசிசம் என்கிற கொடூர விஷத்தை பரிசோதித்து பார்க்கும் பரிசோதனைக் கூடமாக மாற்ற பாஜக அரசு நினைக்கிறது. இந்த நேரத்தில் தமிழ்நாடு மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு அதனை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பெருமைகளைக் கூட அங்கீகரிக்க மனமில்லா அளவுக்கு தமிழ்நாட்டின் மீது வன்மத்தை பாஜக கொண்டுள்ளது.

ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்த பரப்புரை இயக்கம் மூலம் விருப்பம் உள்ள குடும்பத்தினரை திமுகவில் உறுப்பினராக சேர்க்கப்படும். அதன்படி நாளை (ஜூலை 2 ம் தேதி) தஞ்சாவூரில் திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. நாளைய மறுநாள் (ஜூலை 3) முதல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளிலும் வீடு வீடாக சென்று பரப்புரை செய்யப்படும். இந்த பணியில் திமுகவின் பூத் ஏஜெண்டுகள் செயல்படுவார்கள்.

இந்த பரப்புரை இயக்கம் மூலம் தமிழ்நாட்டை பாதுகாக்க ஓரணியில் தமிழ்நாட்டு மக்களை ஒன்று திரட்டுவது தான் முக்கிய இலக்கு என்றார்.

பேட்டியின் போது மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் தி.பழநிவேல், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் வேடந்தாங்கல் ஊராட்சியில் தனியார் பங்களிப்புடன் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்றிய கழக செயலாளர் ஜீ. தம்பு தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் வேணு, வேதாச்சலம், தசரதன், சரத்குமார், சுந்தரமூர்த்தி, ஹரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

செஞ்சி பேரூராட்சியில் தூய்மைபணியாளர் நல வாரியத்தின் சார்பில்

தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 3- செஞ்சி பேரூராட்சியில் தமிழ்நாடு தூய்மைபணியாளர் நல வாரியத்தின் சார்பில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து தூய்மைபணியாளர்கள் நலவாரிய அட்டையை வழங்கினார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி பேரூராட்சிஅலுவலகத்தில் நடைபெற்றது .

நிகழ்ச்சிக்குபேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் மாநில உறுப்பினர் விழுப்புரம் கண்ணன் முன்னிலை வகித்தார்.செஞ்சி பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார். விழுப்புரம் மாவட்ட தாட்கோ மேலாளர் ரமேஷ் குமார் திட்ட விளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்து தூய்மை பணியாளர்களுக்கு நல வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர் அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில்நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் அஞ்சலை நெடுஞ்செழியன்,சங்கர், ஜான் பாஷா,சிவகுமார், நூர் ஜகான் ஜாபர்,புவனேஸ்வரி அண்ணாதுரை,லட்சுமி வெங்கடேசன், பொன்னம்பலம்,துப்புரவு அலுவலர் ராஜா துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார், செந்தில் முருகன், அரசு ஒப்பந்ததாரர் கௌவுஸ் பாஷ திமுக நிர்வாகிகள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் செந்தில் குமார்,தொண்டரணி பாஷா, நரசிம்பன், ஹாஜி, பிரபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .அலுவலக இளநிலை உதவியாளர் பாலாரங்கன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பில் நடைபெற்று வரும் பணிகளை நேற்று 2.7.2025 தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி நேரில் சென்று பார்வையிட்டார்.